செய்தி வெளியீடு எண்: 375 நாள் : 31.07.2015

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சட்டக்கல்லூரி மாணவர்களை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆறுதல்!**

---------x--------

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சட்டக்கல்லூரி மாணவர்களை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை, சட்டம் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களும் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களும் நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறி, அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தனர்.

பின்னர், புரசைவாக்கத்தில் உள்ள சட்டக்கல்லூரி மாணவர் விடுதியை மாண்புமிகு அமைச்சர்கள் பார்வையிட்டு மாணவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தனர். குடிநீர் தொட்டிகளில் உள்ள தண்ணீரை வெளியேற்றி சுத்த செய்யவும், அவ்வளாகத்தில் தேங்கியுள்ள நீரை வெளியேற்றவும், விடுதி வளாகத்தில் துப்பரவு மற்றும் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளவும் மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டனர்.

இந்த ஆய்வின் போது சென்னை மாநகராட்சி துணை மேயர் திரு. பெஞ்சமின், மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., சட்டத்துறை செயலாளர் திரு. எஸ். பூவலிங்கம், சென்னை குடிநீர் வடிகால் வாரிய செயல் இயக்குநர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி துணை ஆணையர் திரு. ஆர். கண்ணன், இ.ஆ.ப., கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் டாக்டர் ஆர். நாராயணபாபு, சென்னை மாநகராட்சி மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**